பிரஸார் பாரதி
அகில இந்திய வானொலி, சென்னை- 4
26 06 2025 7. 15
வியாழக்கிழமை காலை

<u>தலைப்புச் செய்திகள்</u>

1. நாட்டின் விவசாயிகள் நலனில் மத்திய அரசு முழு அக்கறை கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

2. ஆபரேஷன் சிந்து நடவடிக்கை மூலம் ஈரானின் **Mashhad** நகரில் இருந்து 296 இந்தியர்கள் சிறப்பு விமானம் மூலம் நேற்று புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

3. சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

4. பாதுகாப்புத் துறைக்காக 2035ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதம் செலவிடுவதற்கு நேட்டோ நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

5. புவனேஸ்வரில் நடைபெற்ற தேசிய தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் கர்நாடகாவின் **Thinidhi Desingu** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

*<u>--- இனி விரிவான செய்திகள் ---</u>*

**<<<<>>>>**

நாட்டின் விவசாயிகள் நலனில் மத்திய அரசு முழு அக்கறை கொண்டுள்ளதாக பிரதமர் திரு. நரேந்திர மோடி கூறியுள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், ஆக்ராவில் சர்வதேச உருளைக்கிழங்கு மையத்தின் தெற்காசிய மண்டலப் பிரிவை அமைப்பதற்காக மத்திய அமைச்சரவை ஒப்புதல் அளித்துள்ளதற்கு அவர் பாராட்டு தெரிவித்துள்ளார்.

இந்நடவடிக்கை உருளைக்கிழங்கு உற்பத்தியில் ஈடுபட்டுள்ள விவசாயிகளுக்கு பயனளிக்கும் என்று அவர் கூறியுள்ளார்.

புனே மெட்ரோ ரயில் விரிவாக்கத் திட்டத்திற்கும் ஒப்புதல் அளிக்கப்பட்டதன் மூலம் மக்களின் போக்குவரத்து எளிதாகும் என்று திரு. மோடி தெரிவித்துள்ளார்.

**<<<<>>>>**

இந்திய விண்வெளி வீரர் சுபான்ஷு சுக்லா உள்ளிட்ட 4 பேருடன் சர்வதேச விண்வெளி மையத்திற்குச் சென்றுகொண்டிருக்கும் ஆக்சிம்-4 விண்கலம் இன்று மாலை மணி 4.30க்கு சென்றடையும் என்று இஸ்ரோ தெரிவித்துள்ளது.

இந்த விண்கலம் வெற்றிகரமாக ஏவப்பட்டதற்கு பிரதமர் திரு. நரேந்திர மோடி வரவேற்பு தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து சமூக வலைதளத்தில் பதிவிட்டுள்ள அவர், சுபான்ஷு சுக்லா 140 கோடி இந்தியர்களின் வாழ்த்துகள், நம்பிக்கைகள் மற்றும் விருப்பங்களை சுமந்து செல்வதாக கூறியுள்ளார்.

<<<<>>>>

ஆபரேஷன் சிந்து நடவடிக்கை மூலம் ஈரானின் **Mashhad** நகரில் இருந்து 296 இந்தியர்கள் சிறப்பு விமானம் மூலம் நேற்று புதுதில்லி அழைத்து வரப்பட்டனர்.

அவர்களுடன் நேபாள நாட்டவர்கள் 4 பேரும் வந்துள்ளனர். இதன் மூலம் ஈரானில் இருந்து மொத்தம் மூவாயிரத்து 154 இந்தியர்கள் இதுவரை தாயகம் அழைத்து வரப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

இதற்கிடையே இந்திய விமானப்படை விமானம் மூலம் இஸ்ரேலில் இருந்து அழைத்து வரப்பட்ட 224 இந்தியர்களை புதுதில்லியில் நேற்று தொழிலாளர் நலத்துறை அமைச்சர் திருமதி ஷோபா கரந்தலாஜே வரவேற்றார்.

இதன் மூலம் மொத்தம் இஸ்ரேலிலில் இருந்து 818 இந்தியர்கள் தாயகம் திரும்பியுள்ளதாக வெளியுறவு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

சீனாவின் கிங்டாவ் நகரில் இன்று நடைபெறும் ஷாங்காய் ஒத்துழைப்பு அமைப்பின் பாதுகாப்பு அமைச்சர்கள் கூட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திரு. ராஜ்நாத் சிங் பங்கேற்கிறார்.

இக்கூட்டத்தில் பிராந்திய மற்றும் சர்வதேச அளவில் அமைதி மற்றும் பாதுகாப்பு, பயங்கரவாத செயல்களுக்கு எதிரான நடவடிக்கைகள் மற்றும் ஒத்துழைப்பு உள்ளிட்டவை குறித்து பாதுகாப்பு அமைச்சர்கள் விவாதிப்பார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இக்கூட்டத்திற்கிடையே சீனா, ரஷ்யா உள்ளிட்ட நாடுகளின் பாதுகாப்பு அமைச்சர்களுடன் திரு. ராஜ்நாத் சிங் இருதரப்பு பேச்சு நடத்தவுள்ளார்.

<<<<>>>>

போதைப்பொருள் பயன்பாடு, சட்டவிரோத கடத்தல் ஆகியவற்றுக்கு எதிரான சர்வதேச போதைப்பொருள் ஒழிப்பு தினம் இன்று கடைபிடிக்கப்படுகிறது.

இதையொட்டி புதுதில்லியில் இன்று நடைபெற உள்ள நிகழ்ச்சியில் மத்திய சமூக நீதி மற்றும் அதிகாரம் அளித்தல் துறை இணையமைச்சர் திரு. பி.எல். வர்மா கலந்துகொள்கிறார்.

இந்நிலையில், போதைப்பொருள் பயன்பாட்டின் தீமை குறித்து இதுவரை 15 கோடியே 78 லட்சம் பேருக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டுள்ளதாக மத்திய அரசு தெரிவித்துள்ளது.

<<<<>>>>

**CBSE** 10ஆம் வகுப்பு பொதுத் தேர்வுகள் அடுத்த ஆண்டு முதல் இரண்டு முறை நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ள நிலையில், இந்நடவடிக்கை மாணவர்களுக்கு தேர்வு குறித்த மன அழுத்தத்தை குறைக்கும் என்று மத்திய கல்வியமைச்சர் திரு. தர்மேந்திர பிரதான் தெரிவித்துள்ளார்.

மாணவர்கள் கல்வியை மகிழ்ச்சியுடன் கற்பதற்கான சூழலை இது ஏற்படுத்தும் என்று அவர் கூறியுள்ளார்.

உலகளாவிய கல்வி நடைமுறைகளுக்கு ஏற்பவும் மாணவர்களுக்கு உகந்ததாக அமையும் வகையிலும் தேசிய கல்விக் கொள்கையின் பரிந்துரையின்படி இம்முடிவு மேற்கொள்ளப்பட்டுள்ளதாக திரு. தர்மேந்திர பிரதான் குறிப்பிட்டார்.

<<<<>>>>

அரசு மின்னணு சந்தையில் கொள்முதல் செய்வது பயிலரங்கு சென்னை பத்திரிகை தகவல் அலுவலகத்தில் நடைபெற்றது.

மத்திய அரசின் கொள்முதல் தளமான **gem.gov.in** என்ற தளத்தில் பொருட்கள் மற்றும் சேவைகளை எவ்வாறு பெறுவது என்பது குறித்து தமிழ்நாடு மற்றும் புதுச்சேரி மண்டலத்திற்கான பயிற்சியாளர் திரு. வெங்கடேஷ் பழனி விளக்கமளித்தார்

இப்பயிலரங்கில் மத்திய மக்கள் தொடர்பகம், டிடி. தமிழ், ஆகாஷ்வாணி மற்றும் வெளியீட்டுப் பிரிவு துறைகளைச் சேர்ந்த அலுவலர்கள் பங்கேற்றனர்.

<<<<>>>>

பாதுகாப்புத் துறைக்காக 2035ஆம் ஆண்டுக்குள் மொத்த உள்நாட்டு உற்பத்தியில் 5 சதவீதம் செலவிடுவதற்கு நேட்டோ நாடுகள் ஒப்புக்கொண்டுள்ளன.

ஹேக் நகரில் நடைபெற்ற மாநாட்டில் இதற்கான முடிவு மேற்கொள்ளப்பட்டது.

பாதுகாப்பு தொடர்பான செலவினங்களுக்காக மொத்த உள்நாட்டு உற்பத்தியில் ஒன்று புள்ளி 5 சதவீதம் செலவிட உள்ளதாகவும் அவர்கள் கூறியுள்ளனர்.

இம்மாநாட்டில் பேசிய நேட்டோ அமைப்பின் தலைவர் திரு. **Rutte** கடந்த ஆண்டு யுக்ரைனுக்கு 58 பில்லியன் டாலர் அளவிற்கு ராணுவ உதவி வழங்கப்பட்ட நிலையில் இந்த ஆண்டு அது மேலும் அதிகரிக்கும் என்று தெரிவித்தார்.

ராணுவத்திற்காக ஐரோப்பா மற்றும் கனடா நாடுகள் அதிக அளவு செலவு செய்ய வேண்டும் என்று அவர் கேட்டுக்கொண்டார்.

இம்மாநாட்டில் பேசிய அமெரிக்க அதிபர் திரு. டொனால்ட் ட்ரம்ப் ராணுவ தளவாடங்களுக்காக கூடுதல் நிதி செலவு செய்யப்பட வேண்டும் என்று குறிப்பிட்டார்.

யுக்ரைன் உடனான போரை முடிவுக்குக் கொண்டுவர ஒத்துழைக்குமாறு அண்மையில் ரஷ்ய அதிபர் திரு. புடினிடம் தாம் கேட்டுக்கொண்டதாகவும் திரு. ட்ரம்ப் கூறினார்.

<<<<>>>>

கோவை மாவட்டம் மேட்டுப்பாளையம் அருகே பில்லூர் அணை முழு கொள்ளளவை எட்டியுள்ளது.

இதன் காரணமாக அணையில் இருந்து வினாடிக்கு 15 ஆயிரம் கன அடி தண்ணீர் பவானி ஆற்றில் வெளியேற்றப்படுவதால் கரையோர மக்களுக்கு வெள்ள அபாய எச்சரிக்கை விடுக்கப்பட்டுள்ளதாக எமது செய்தியாளர் தெரிவிக்கிறார்.

இதனிடையே ஒகேனக்கல் காவிரியாற்றில் இன்று காலை 6 மணி நிலவரப்படி நீர்வரத்து வினாடிக்கு 24 ஆயிரம் கன அடியாக அதிகரித்துள்ளது.

கர்நாடக அணைகளில் தண்ணீர் திறப்பு அதிகரிக்கப்பட்டுள்தால் இந்த நீர்வரத்து மேலும் அதிகரிக்கக்கூடும் என்று எமது தருமபுரி செய்தியாளர் தெரிவிக்கிறார்.

<<<<>>>>

கேலோ இந்தியா பல்கலைக்கழக விளையாட்டுப்போட்டிகள் ராஜஸ்தான் மாநிலம் ஜெய்ப்பூரில் நவம்பர் நடைபெறும் என்று மத்திய விளையாட்டுத்துறை அமைச்சர் திரு. மன்சுக் மாண்டவியா தெரிவித்துள்ளார்.

நடப்பாண்டு 20 பிரிவுகளில் 200க்கும் மேற்பட்ட பல்கலைக்கழகங்களைச் சேர்ந்த 4 ஆயிரத்துக்கும் அதிகமான வீரர்கள் பங்கேற்பார்கள் என்று அவர் கூறியுள்ளார்.

தேசிய அளவிலான போட்டிகளில் இடம்பெறுவதற்கு இப்பல்கலைக்கழக போட்டிகள் வீரர்களுக்கு சிறந்த வாய்ப்பை அளிப்பதாக திரு. மன்சுக் மாண்டவியா குறிப்பிட்டார்.

<<<<>>>>

நாட்டின் வடமேற்கு, மத்தியப் பகுதிகள், கிழக்குப் பகுதிகள் மற்றும் வடகிழக்குப் பகுதிகளில் அடுத்த 7 நாட்களுக்கு கன முதல் அதிகனமழை பெய்யக்கூடும் என்று வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

குஜராத் மற்றும் ஒடிசாவின் குறிப்பிட்ட பகுதிகளில் கன முதல் மிக கனமழைக்கு வாய்ப்பிருப்பதாக கூறியுள்ளது.

அத்துடன் கர்நாடக கடலோரப் பகுதிகள், கிழக்கு ராஜஸ்தான், ஜார்கண்ட், கேரளா, மாஹே, தமிழ்நாடு, புதுச்சேரி உள்ளிட்ட மாநிலங்களின் சில பகுதிகளில் இன்று கன முதல் மிக கனமழைக்கு வாய்பிருப்பதாகவும் வானிலை ஆய்வு மையம் தெரிவித்துள்ளது.

<<<<>>>>

புவனேஸ்வரில் நடைபெற்ற தேசிய தேசிய நீச்சல் சாம்பியன் போட்டியில் கர்நாடகாவின் **Thinidhi Desingu** புதிய தேசிய சாதனை படைத்துள்ளார்.

இப்போட்டியின் மகளிர் 100 மீட்டர் ஃப்ரீ ஸ்டைல் பிரிவில் பந்தய தூரத்தை 56 புள்ளி ஏழு எட்டு வினாடிகளில் கடந்து அவர் இந்த சாதனை படைத்துள்ளார்.

**Rujula** 57 புள்ளி ஏழு ஒன்பது வினாடிகளில் கடந்து வெள்ளிப் பதக்கத்தையும், **Janvi Kashyap** 58 புள்ளி 5 வினாடிகளில் கடந்து வெண்கலப் பதக்கத்தையும் வென்றார்.

**<<<<>>>>**

நான்கு நாடுகள் பங்கேற்ற ஜூனியர் ஹாக்கிப் போட்டியில் இந்திய அணி 3ஆம் இடத்தைப் பிடித்தது.

பெர்லினில் நடைபெற்ற இதற்கான ஆட்டத்தில் இந்திய அணி 2-1 என்ற கோல் கணக்கில் ஆஸ்திரேலியாவை வென்றது.

**<<<<The End>>>>**